# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

தொலைபேசி : 2434 7590

**குறிப்பாணை எண்.7483/D/2015, நாள் 30.11.2017**

| | |
|---|---|
| மனுதாரர் | திரு. S.பீட்டர்ராஜ், சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம். |
| R.T.I. மனு நாள் | 16.03.2015 |
| ஆணையத்திற்கு முறையீடு செய்த நாள் | 27.05.2015 |
| ஆணையத்தின் உத்தரவு | 22.06.2015 |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர், தூய இருதய மேல்நிலைப்பள்ளி, சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம். |

மேற்கண்டவற்றின் தொடர்ச்சியாக பதில் அளிக்கவில்லை என்று **29.08.2015** அன்று மனுதாரர் முறையீடு அனுப்பி அது **M.P எண் 14367/D/2015** என்று பதிவாகியுள்ளது.

இது குறித்து முடிவு செய்வதற்கு 10.01.2018 தேதிக்கு முன் குறிப்புரை அனுப்பக் கோரப்படுகிறது. ஆணையத்தின் உத்தரவுக்கு முன்பும் பின்பும் தரப்பட்ட பதில்களின் நகல்களை இணைத்து குறிப்புரை அனுப்பப்பட வேண்டும். மேலும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகளுக்கு விவரமான விளக்கங்கள் தரவேண்டும். குறிப்பிட்டவாறு பதில் பெறப்படவில்லையென்றால் அதில் விசாரணை மேற்கொள்ள நேரிட்டால் மனுதாரருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(8)(b)ன்கீழ் இழப்பீடு வழங்க நேரிடும் என்பதும் தெரிவிக்கப்படுகிறது.

இத்துடன் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு, ஏற்கெனவே பிறப்பித்த ஆணையின் நகல், அதன் பின் மனுதாரர் சமர்ப்பித்த மேல்முறையீடுகளின் நகல்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இதற்கு பதில் அனுப்பும்போது இத்துடன் கீழ் இணைக்கப்பட்ட படிவம் தவறாமல் அனுப்பவேண்டும்.

4/4 பதிவாளர்

தமிழ்நாடு தகவல் ஆணையம்
05 டிச 2017
சென்னை - 600 018

அனுப்புநர்

தலைமை ஆசிரியர்,
தூய இருதய மேல்நிலைப்பள்ளி,
சாத்தான்குளம் - 628704.
தூத்துக்குடி மாவட்டம்,
செல் : 9360705453
போன் : 04639-266123

பெறுநர்

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண் 2, தியாராசர் சாலை,
ஆலை அம்மன் கோயில் அருகில்,
தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் மனு, நாள் : 16.03.2015 - மனுதாரர் திரு. S. பீட்டர்ராஜ், சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம் - குறிப்பாணை எண் 7483/D/2015, நாள் : 30.11.2017 பதிவாளரின் கடிதம் - ஆவணங்கள், குறிப்புரை மற்றும் விளக்கங்கள் - தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

தங்களின் 30.11.2017 தேதியிட்ட குறிப்பாண எண் 7483/D/2015 கடிதத்தைப் பெற்றுக் கொண்டேன. அதில் 16.03.2015 தேதியிட்ட திரு. S. பீட்டர்ராஜ் என்பவரின் மனு தொடர்பான 22.06.2015 தேதியிட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, தாங்கள் சில தகவல்களை மனுதாரருக்கு அனுப்பும்படிப் பணித்திருந்தீர்கள்.

ஏற்கெனவே 22.07.2015 தேதியிட்ட கடிதத்தின்மூலம் ஆணையத்திற்கும், 16.09.2015 தேதியிட்ட கடிதத்தின் மூலம் திரு. S. பீட்டர்ராஜ் என்பவருக்கும் அவர் கோரியிருந்த தகவல்களும், ஆவணங்களும் அனுப்பப்பட்டன. இருப்பினும், மனுதாரர் திருப்தி அடையாததால் மீண்டும் சிலவற்றைக் கோரியிருந்தார். அதனடிப்படையில் ஏற்கெனவே அனுப்பிய தகவல்களுடன் அவர் சுட்டிக்காட்டிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து, மற்றுமொரு தகவல் படிவத்தை ஆவணங்களுடன் திரு. S. பீட்டர்ராஜ் அவர்களுக்கு அனுப்பியுள்ளேன். அதன் நகலைத் தங்களுக்குப் பணிந்து சமர்ப்பிக்கிறேன். ஏதேனும் குறைகள் இருந்தால், அருள்கூர்ந்து மன்னிக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்.

சாத்தான்குளம்
08.01.2018

இப்படிக்கு,

[signature] 08/01/18
தலைமை ஆசிரியர்
தூய இருதய மேல்நிலைப்பள்ளி
சாத்தான்குளம் - 628 704
தூத்துக்குடி மாவட்டம்

**இணைப்பு : தொகுப்பு I**

1. மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு, நாள் : 16.03.2015
2. மனுதாரர் அனுப்பிய தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவிற்குத் தலைமையாசிரியர் அனுப்பிய தகவல்கள், நாள் : 16.04.2015

Scanned by CamScanner

அனுப்புநர்

மேல்முறையீட்டாளர்,
பள்ளி நிர்வாகி,
தூய இருதய மேல்நிலைப்பள்ளி,
சாத்தான்குளம் - 628704.
தூத்துக்குடி மாவட்டம்,
செல் : 9486077729
போன் : 04639-266888

பெறுநர்

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண் 2, தியாராசர் சாலை,
ஆலை அம்மன் கோயில் அருகில்,
தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் மனு, நாள் : 16.03.2015 - மனுதாரர் திரு. S. பீட்டர்ராஜ், சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம் - குறிப்பாணை எண் 7483/D/2015, நாள் : 30.11.2017 பதிவாளரின் கடிதம் - ஆவணங்கள், குறிப்புரை மற்றும் விளக்கங்கள் - தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

தங்களின் 30.11.2017 தேதியிட்ட குறிப்பாண எண் 7483/D/2015 கடிதத்தைப் பெற்றுக் கொண்டேன. அதில் 16.03.2015 தேதியிட்ட திரு. S. பீட்டர்ராஜ் என்பவரின் மனு தொடர்பான 22.06.2015 தேதியிட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, தாங்கள் சில தகவல்களை மனுதாரருக்கு அனுப்பும்படிப் பணித்திருந்தீர்கள்.

ஏற்கெனவே 22.07.2015 தேதியிட்ட கடிதத்தின்மூலம் ஆணையத்திற்கும், 16.09.2015 தேதியிட்ட கடிதத்தின் மூலம் திரு. S. பீட்டர்ராஜ் என்பவருக்கும் அவர் கோரியிருந்த தகவல்களும், ஆவணங்களும் அனுப்பப்பட்டன. இருப்பினும், மனுதாரர் திருப்தி அடையாததால் மீண்டும் சிலவற்றைக் கோரியிருந்தார். அதனடிப்படையில் ஏற்கெனவே அனுப்பிய தகவல்களுடன் அவர் சுட்டிக்காட்டிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து, மற்றுமொரு தகவல் படிவத்தை ஆவணங்களுடன் திரு. S. பீட்டர்ராஜ் அவர்களுக்கு அனுப்பியுள்ளேன். அதன் நகலைத் தங்களுக்குப் பணிந்து சமர்ப்பிக்கிறேன். ஏதேனும் குறைகள் இருந்தால், அருள்கூர்ந்து மன்னிக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்.

சாத்தான்குளம்
08.01.2018

இப்படிக்கு,

தாளாளர்
தூய இருதய மேல்நிலைப் பள்ளி
சாத்தான்குளம் - 628 704
தூத்துக்குடி மாவட்டம்.

**இணைப்பு : தொகுப்பு I**

1. மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு, நாள் : 16.03.2015
2. மனுதாரர் அனுப்பிய தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவிற்குத் தலைமையாசிரியர் அனுப்பிய தகவல்கள், நாள் : 16.04.2015

Scanned by CamScanner